BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் கலைஞர்கள் அவரவர் கதையைக் கூற அழைக்கப்படுகிறார்கள்

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 4, 2021) – ப்ராம்ப்ட்டன் நகரில் புதிதாக உருவாக்கப்பட்ட கலை, கலாச்சாரம் மற்றும் படைப்புரீதியான தொழில் மேம்பாட்டு முகமையானது (Arts, Culture and Creative Industry Development Agency (ACCIDA)) கலைஞர்கள் தங்கள் கதைகளைப் பகிர்ந்துகொள்ளவும் மற்றும் நகருக்கு எழுதப்பட்ட ஒரு அன்பின்பேரிலான கடிதமாகிய டிஜிட்டல் அஞ்சல் அட்டை மூலமாக தங்கள் கலைகளை வளர்த்துக்கொள்ளவும் அழைப்பு விடுக்கிறது.

*அஞ்சல் அட்டை திட்டம் - உங்கள் கலைஞரின் கதையைப் பகிரவும்* என்னும் அமைப்பானது, இப்போது டிஜிட்டல் அஞ்சத அட்டையில் அவரவர் படைப்புகளைக் காண்பிப்பதற்காக ப்ராம்ப்ட்டன் கலைஞர்கள், படைப்பாளிகள், இசைக்கலைஞர்கள் மற்றும் நிகழ்த்து கலைஞர்களிடமிருந்து, டிஜிட்டல், காட்சிக்கு வைக்கப்படும் வகையிலான கலைப்படைப்புகளில் 20 பழைய அல்லது புதிய சமர்ப்பிப்புகளை ஏற்றுக்கொள்கிறது. ப்ராம்ப்ட்டன் நகரினால் சலனம் ஏற்படுத்தப்பட்டு இந்த நகரத்துடன் தங்களுக்கு ஏற்பட்ட தொடர்பினால் உந்தப்பட்ட, ப்ராம்ப்ட்டனுக்கு வெளியே உள்ள கலைஞர்களும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்த வாய்ப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்களுக்கு 'ஒரு முறை-கலைஞர்' கட்டணமாக $ 250 வழங்கப்படும்.

'உங்கள் கலைஞர் கதை'யாகிய அஞ்சல் அட்டை திட்டத்தின் ஒரு பகுதியாக , ACCIDA ஆனது உங்கள் படைப்புகளை, கலைக்கு கொடுக்கப்படும் உரிய மதிப்புடன், ACCIDA இன் சமூக ஊடக தளங்களில், டிஜிட்டல் அஞ்சல் அட்டையில் மற்றும் வரவிருக்கும் விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் முயற்சிகளின் ஒரு பகுதியாக பகிர்ந்து கொள்ளும். கலைஞர்கள் பல படங்களை சமர்ப்பிக்கலாம் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட முறையும் கூட தேர்ந்தெடுக்கப்படலாம், ஆனாலும்கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட 20 படைப்புகளுக்குள் இந்த வாய்ப்பை முடிந்தவரை பல கலைஞர்களுடன் பகிர்ந்து கொள்வதே இதன் நோக்கமாகும்.

நகரத்துடனான தங்கள் தொடர்பு என்னவெனத் தேடிக்கண்டறிய கலைஞர்கள் வரவேற்கப்படுகிறார்கள், மற்றும், தங்களின் கலைப்பழக்கமானது ப்ராம்ப்ட்டன் நகரின் உற்சாகம் மற்றும் கதைகளை எவ்வாறு படம் பிடிக்கிறது என்பதைப் பிரதிபலிக்கவும் அவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். கலைப்படைப்பானது புதிதாகவோ அல்லது பழையதாகவோ இருக்கலாம், தங்களின் அசல் படைப்பாக இருக்கலாம் மற்றும் புகைப்படம் எடுத்தல், எழுத்து வேலை, ஒரு நிகழ்த்துகலையின் ஆவணங்கள், டிஜிட்டல் வடிவிலான படங்களின் கோர்வை மற்றும் டிஜிட்டல் அல்லாத படைப்புகள், கையால் வரையப்பட்ட விளக்கப்படங்கள் மற்றும் ஓவியங்கள் உள்ளிட்டவையாக இருக்கலாம்; இவற்றை விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப டிஜிட்டல் மயமாக்கலாம். பொருள்ரீதியல்லாத மற்றும் பிரதிநிதித்துவமற்ற படைப்புகளும் வரவேற்கப்படுகின்றன, ஊக்குவிக்கப்படுகின்றன.

சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவானது ஜூன் 17, 2021 ஆகும். சமர்ப்பிப்புகள் ACCIDA யினால் மதிப்பாய்வு செய்யப்படும். கூடுதல் தகவல்களுக்கு அல்லது கேள்விகளுக்கு தயவுசெய்து திட்ட விவரங்களை இங்கு காணலாம்; சமர்ப்பிப்புகளை தலைப்பில் 'உங்கள் கலைஞர் கதை' என குறிப்பிட்டு accida@brampton.ca க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

**அறிஞர் கூற்றுக்கள்**

அஞ்சல் அட்டை திட்டம்: 'உங்கள் கலைஞர் கதையைப் பகிரவும்' என்பது 2040 ஆம் ஆண்டில் ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கான தொலைநோக்குப் பார்வையை ஆதரிக்கிறது; இது தற்போதுள்ள கலாச்சார சூழலை அனைத்து கலைஞர்கள், படைப்பாளிகள், இசைக்கலைஞர்கள் மற்றும் நிகழ்த்துகலை கலைஞர்களுக்கான வாய்ப்புகளுடன் செழிப்பான கலைக் காட்சியாக மாற்றும். ப்ராம்ப்ட்டன் நகரத்தில் உள்ள அனைத்து கலைஞர்களும் தங்கள் கதைகளை எங்களிடம் சொல்வதை நான் ஊக்குவிக்கிறேன். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

”உள்ளூர் கலை மற்றும் கலாச்சார சமூகத்துடன் நாங்கள் உறவுகளை மேம்படுத்தத் தொடங்கும் இந்த சமயமானது, ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கு ஒரு உற்சாகமான நேரம் ஆகும். உள்ளூர் கலைஞர்கள் தங்கள் கதைகளைப் பகிர்ந்துகொள்வது இந்த முக்கியமான உறவுகளை மேம்படுத்த இந்த முகமைக்கு உதவும், அதே நேரத்தில், ப்ராம்ப்ட்டன் கலைஞர்களின் பணியை ஊக்குவிக்கவும் செய்யும். ”

- *- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத் தலைவர், பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கலைஞர்களுக்கு விடுக்கப்படும் இந்த அழைப்பானது, புதிதாக உருவாக்கப்பட்ட கலை, கலாச்சாரம் மற்றும் படைப்புரீதியான கைத்தொழில் மேம்பாட்டு முகமையை நிறுவ உதவும், இந்த முகமையானது, ப்ராம்ப்ட்டனில் ஒரு வலுவான, ஆக்கபூர்வமான மற்றும் தொழில்முனையும் சமூகத்தை ஆதரித்து, தொற்று பேரிடர் காலத்திற்கு பிந்தைய பொருளதாரத்தை மறுகட்டுமானம் செய்ய உதவுகிறது.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக்

கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca